நல்லூர் இளை நூலகம்
மாநகர
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

பக்கங்கள் 04 விலை! ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | மார்கழி 29 | (13-01-1994) | வியாழக்கிழமை | ஓசை 329

## யாழ். மாவட்டத்தில் ஒரே மாதத்தில் 1731 பேருக்கு மலேரியா நோய்

யாழ். சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனைக்குட்பட்ட சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் கடந்த நவம்பர் மாதம் மட்டும் 1731 பேர் மலேரியா நோய்க்கிலக்காகியதாக புள்ளி விபரமொன்று தெரிவிக்கின்றது. மேற்படி நோய்க்கிலக்கானவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஒன்பதாயிரத்து 253 பேரின் இரத்தம் எடுத்து பரிசோதனைக்குட்படுத்திய போதே 1731 பேர் அந் நோய்க்கிலக்கானது தெரியவந்ததாக நேற்று சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனையில் நடைபெற்ற வாராந்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (சி)

# புக்காரா குண்டுவீச்சு கணவன், மனைவி பலி

## நெடுங்கேணியில் துயரச்சம்பவம்

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் நெடுங்கேணிப் பகுதியில் மக்கள் குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா விமானப் படையினரின் புக்காரா குண்டுவீச்சு விமானங்கள் மேற்கொண்ட கண்மூடித்தனமான குண்டு வீச்சினால் கணவன், மனைவி பலியாகினர். மேலும் ஒருவர் படுகாயமடைந்தார். பல லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசமடைந்தன.**

நேற்று முன்தினம் காலை 10.45 மணியளவில் முல்லைமாவட்டத்தில் உள்ள நெடுங்கேணிப் பகுதி மக்கள் வாழ்விடங்கள் மீது வட்டமிட்ட இரு புக்காரா குண்டு வீச்சு விமானங்கள் நடாத்திய தாக்குதல்களினால் தோ. மங்கள ஜெகநாதன் (வயது 44) இவரது மனைவியான நவமணி வசந்தா (வயது 40) ஆகியோர் ஸ்தலத்திலேயே சிதறிப் பலியானார்கள். நெடுங்கேணியைச் சேர்ந்த திருமதி பாலசுந்தரம் இராஜேஸ்வரி (வயது30) என்பவர் படுகாயமடைந்தார். மேலும் பொதுமக்களின் பல வீடுகள், உழவு இயந்திரங்கள் என்பன பலத்த சேதமடைந்தன. பல லட்ச ரூபா பெறுமதியான புகையிலை மற்றும் செத்தல் ஆகியனநாசமாக்கப்பட்டுள்ளன.

இத்தாக்குதல் பரவலாக மேற்கொள்ளப்பட்டதால் பாடசாலை மாணவர்கள் நாலாபுறமும் சிதறி ஓடிப் பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்தமையால் பல உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## அலம்பிலில் நேற்றுக்காலை விமானக் குண்டுத் தாக்குதல்

### வீடு சேதம்; உடைமைகள் நாசம்

(யாழ்ப்பாணம்)

மணலாறு மாவட்டத்தில் உள்ள அலம்பில் பகுதியில் இரு புக்காரா விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன.

நேற்றுக்காலை சுமார் 10.30 மணியளவில் திடீர் வட்டமிட்ட இந்த விமானங்கள் பல குண்டுகளை ஏவின.

இச்சம்பவத்தின் போது நூற்றுக்கு மேற்பட்ட தென்னை மரங்கள் முறிந்து வீழ்ந்து நாசமாகின என்று செய்திகள் கிடைத்துள்ளன.

இரு புக்காரா விமானங்க ...னப் படையினரின் இந்த நடவடிக்கையின் போது, நாகலிங்கம், இரத்தினராசா என்பவர்களின் தென்னந் தோப்புகளே அழிந்தன.

இதேவேளை, நாகலிங்கம் என்பவரின் வீடு முற்றாகச்

## சிறுமி மீது இராணுவம் பாலியல் வன்முறை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 13 வயது சிறுமி ஒருத்தி சிறிலங்கா இராணுவத்தால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டார்.

இதுபற்றித்தெரியவருவதாவது; கடந்த முதலாம்திகதி ... சேனை என்ற கிராமத்தில் ஒருவீட்டிற்குள் புகுந்த இராணுவத்தினரே சிறுமி மீது பாலியல் வன்முறையைப் பிரயோகித்தனர். இதைத் தொடர்ந்து இக்கிராமத்தில் பெரும் பதற்றம் நிலவிவரு

## ஜனாதிபதி டி.பியை தூக்கி எறிய ஐ. தே. கவில் திரைமறைவில் சதி?

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதிக்கு அரசியலில் பெரும்நெருக்கடியைக் கொடுத்து அவரை அரசியலில் இருந்து தூக்கிவீசுவதற்கான திரைமறைவு நடவடிக்கைகளில் ஐக்கிய தேசியக்கட்சியில் உள்ள முன்னணி உறுப்பினர்கள் சிலர் ஈடுபட்டு வருவதாக சிங்கள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சிறிலங்கா ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜேதுங்காவுக்கு பல வழிகளில் நெருக்கடிகளை கொடுத்து அவரினால் நாட்டை ஆட்சி செய்ய முடியாது என்ற ஒரு நிலையை உண்டாக்கி அவரை கட்சியில் இருந்து வெளியேற்றி விட்டு தாம் உயர் பதவிகளை வகிப்பதற்கு இவர்கள் முயற்சிகள் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில், சிறிசேன குரே, ரணில்விக்கிரமசிங்கா, அனுரா பண்டாரநாயக்க போன்றோர் அடங்குவார்கள் என்றும் இவர்களுக்கு பின்னால், முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா ஆலோசனைகளை வழங்கி வருவதாக அப்பத்திரிகை மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

## இரவுநேர ஹெலி தாக்கு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் இரவு வேளையில் உலங்கு வானூர்தியொன்று கண்மூடித்தனமான தாக்குதல் ஒன்றை நடத்தியது.

நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் பலாலிப் பக்கமாக இருந்து வந்த உலங்கு வானூர்தியே இத் தாக்குதலை நடத்தியது. கொடிகாமம், மிருசுவில், எழுதுமட்டுவாள், கிளாலி, பளை ஆகிய இடங்களிலேயே இக் கலிபர் தாக்குதல் நடத்தப்பட்டது. (86)

### மத்திய மாகாணசபை;

## கடத்தப்பட்ட உறுப்பினர் விசேடஹெலியில்சென்றனர்

(கொழும்பு)

மத்திய மாகாணத்தில் கடத்தப்பட்ட இ. தொ. கா 8 மாகாணசபை உறுப்பினர்களையும் விசேட உலங்கு வானூர்தி மூலம் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டதாகத் தெரியவருகின்றது.

உலங்கு வானூர்தியில் கொண்டுசெல்லப்பட்ட இவ் உறுப்பினர்களுக்கு பலத்தபாதுகாப்பு வழங்கப்பட்ட நிலையில் ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும், அங்கு இ. தொ. கா பொதுச்செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவுடன் இவர்களை சந்தித்ததாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இவ் உறுப்பினர்கள்தொடர்ந்துஉல்லாசப் பயணிகள் விடுதியொன்றில் மிகவும் பாதுகாப்பான சூழ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டமானின் பேரன் பொலிஸ் முன் ஆஜர்

(கொழும்பு)

இ.தொ. கா பொதுச்செயலாளரின் அலுவலக அறை உடைப்பு தொடர்பாகத் தேடப்பட்ட அமைச்சர் தொண்டமானின் பேரன் ஆறுமுகம் தொண்டமான் நேற்றுக் கொள்ளுப்பிட்டிப் பொலிசில் ஆஜராகி குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விளக்க அறிக்கை கொடுத்த பின்னர் விடுதலை செய்யப்பட்டார். தேடப்பட்டு வந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

### செயலாளர் செல்லச்சாமியுடன்

## பேச்சுவார்த்தை தொடர தொண்டமான் நிபந்தனை

10. 30 மணியளவில் திடீர் என்று பேரிரைச்சலுடன் இப் பகுதிக்கு மேலாலபறந்து இரு புக்காரா விமானங்களும் ரொக்கட் தாக்குதலையும் மேற்கொண்டன. விமா

எனப்வான் வடு முற்றாகச் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

வது; கடந்த முதலாம்திகதி நண்பகல் பாவற்கொடிச்

பெரும் பதற்றம் நிலவிவருகின்றது.

# பற்சிகிச்சை வைத்தியர் மாத்தளையில் கைது!

## புலிகளுடன் தொடர்பாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் தொடர்புவைத்திருந்ததாகக் கூறப்படும் பற் சிகிச்சை அளிக்கும் டாக்டர் ஒருவர் மாத்தளை பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கும் இவருக்கும் மிக நெருக்கமான தொடர்பு இருப்பதாகவும், மலையக தமிழ் இளைஞர்களை விடுதலைப்புலிகள் அமைப்புடன் இணைக்கும் செயல்களில் இவர் ஈடுபட்டு வருவதாக கிடைத்த தகவல்

(4ஆம் பக்கம் பார்க்க)

# பதுங்கியிருந்த ராணுவம் தாக்கி இருவர் வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வெருகல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மேற்படி தாக்குதலின் போது வீரச்சாவடைந்த கப்டன் தினகரன் (காத்தமுத்து யோகநாதன்-நெல்லிக்காடு ஆயித்தியமலை)

லெப்டினன்ட் பகீன் (கணேசமுத்து நாகேஸ்வரன்-ஆஸ்பத்திரிவீதி சந்திவெளி) ஆகிய இருவருக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



கப்டன் தினகரன்



லெப்டினன்ட் பகீன்

# படகு சேவை நாளை இல்லை

தைப்பொங்கல் நாளை முன்னிட்டு 14-01-94 வெள்ளிக்கிழமை கிளாலிப் படகு சேவைநடைபெறாதெனவும், ஏனைய நாட்களில் வழமை போல் சேவை நடைபெறுமெனவும் தங்கள் கவனத்திற்கு அறியத்தருகின்றோம்.

# கிழக்கு உள்ளூராட்சிகளுக்கு மார்ச் 1இல் தேர்தல்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திலும் வவுனியா நகரசபைப் பகுதிகளிலும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் மார்ச்மாதம் முதலாம்திகதி நடைபெறவுள்ளது என தேர்தல் ஆணையாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, திருக்கோணமலை ஆகிய மாவட்டங்களில் ஒரு மாநகரசபை, மூன்று நகரசபைகள், 36 பிரதேச சபைகள் என்பன அடங்கிய 40 உள்ளூராட்சிசபை தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் நேற்று நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டன.

40 சபைகளுக்கான தேர்தல்களிலும் போட்டிகள் நிலவுகின்றன. இதில் ஏழு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் போட்டியிடுகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சி 38

(4ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கு தேர்தல் வன்முறைக்குவழிவகுக்கும்

(கொழும்பு)

இராணுவத்துடன் இணைந்து நடவடிக்கையில் ஈடுபடும் தமிழ்க்குழுக்கள் தேர்தலில் போட்டியிடுவதால் இது தேர்தலில் வன்முறைக்கு வழிவகுக்கும் என பி.பி.ஸி. தெரிவித்தது.

சுமார் நாற்பது உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களில் 2000க்கும் அதிகமான வேட்பாளர்கள்போட்டியிட உள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. தமிழ்க் கட்சிகள் இந்தத் தேர்தல்களைப் பகிஷ்கரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தேர்தல்கள் இனப்பிரச்சினைக்கோ அல்லது இந்தப் பகுதிகளில் தொடர்ந்து இடம் பெறும் சம்பவங்களுக்கோ தீர்வுகாணப்போவதில்லை என்று தமிழ்க்கட்சிகளை மேற்கோள் காட்டி பி.பி.ஸி. கருத்துக் கூறியுள்ளது.

## கிழக்கு உள்ளூராட்சித் தேர்தலில்

# வன்முறை பிரயோகிப்பின் ஐ.தே.க விற்கு பின்னடைவு

கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களைத் தவிர ஏனையோர் மீது வன்முறைகள் பிரயோகிக்கப்படுமாயின் அது ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் என பி.பி.ஸி. தனது கண்ணோட்டத்தில் தெரிவித்தது.

நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும் தினத்திற்கு முன்னரே ஐக்கிய தேசியக் கட்சி பலர் மீது நிர்ப்பந்தங்கள் பலவற்றை பிரயோகித்துள்ளது. இது மேலும் அதிகரிக்கலாம் என பி.பி.ஸி. மேலும் தெரிவித்தது.

# தொண்டமான் நிபந்தனை

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தேசிய சபையின் தீர்மானத்திற்கு எதிராக அதன் பொதுச் செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ள வழக்கை வாபஸ் பெறாத பட்சத்தில் அதற்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கவேண்டி. ஏற்படும் என

(4 ஆம் பக்கம் பார்க்க)

## எலும்புக்கூடு படம் பிரசுரமான

# 30 ஆயிரம் 'லங்கா தீப' பத்திரிகைகள் தீக்கிரை

(கொழும்பு)

சூரியகந்த புதைகுழியில் காணப்பட்ட மனித எலும்புகளின் படங்களுடன் வெளிவரத்தயாராக இருந்த 'லங்கா தீப' பத்திரிகையின் முப்பதினாயிரம் பிரதிகள் தீயிடப்பட்டுள்ளன.

'லங்கா தீப' பத்திரிகையின் நகரப்பதிப்பே இவ்வாறு தீயிடப்பட்டது. சிறிலங்காபிரதமர் ரணில்விக்ரமசிங்க மேற்படிபத்திரிகைக் காரியாலயத்திற்கு நேரில்சென்று இவை பொதுமக்களுக்கு எப்படியும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தமே முக்கிய பிரச்சினை; காணாமல் போனோர் பற்றியதல்ல

## - டிரோன்பெர்னாண்டோ

(கொழும்பு)

வடக்கு கிழக்கு யுத்தத்தினால் இன்று நாடு முழுவதும் தீப்பிடித்து எரிகின்றது. எனவே இன்று எமது நாட்டிலுள்ள முக்கிய பிரச்சினை வடக்கு கிழக்கு யுத்தம் மட்டுமே என தகவல் ஒலிபரப்பு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தெற்கேசில அரசியல் வாதிகள் குழப்பத்தை விளைவிக்கும் நோக்குடன் சில செயல்களை திட்டமிட்டு செய்கின்றார்கள். இதற்கு பத்திரிகைகளும் துணைபோகின்றது. இச் செயல் விரும்பத்தகாத செயல் ஆகும். ஒற்றை ஆட்சியை விரும்பும் எவரும் இதனை விரும்பமாட்டார்கள்.

1988/1989 ஆண்டு கால தென்னிலங்கை கிளர்ச்சியின் போது காணாமல் போனவர்கள் தொடர்பாக சென்ற சில தினங்களாக சர்ச்சைகளை கிளப்புகின்றார்கள்.

நாம் 1971/1972-ம் ஆண்டு நடந்தவற்றை மறந்து விடவில்லை என்பதே உண்மை

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஆர். சி. எல். தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் பிற்பகல் ஐந்து மணியளவில் விளான் பகுதி நோக்கி இராணுவத்தினர் ஆர். சி. எல். தாக்குதலை நடத்தினர்.

இத் தாக்குதலின் போது எட்டு ஆர். சி. எல் பீரங்கிக் குண்டுகள் குடியிருப்பு பகுதிகள் மீது ஏவப்பட்டன.

# இலவச இணைப்பு

தளபதி கேணல் கிட்டு உட்பட வங்கக் கடலில் காவியமாகிய 10 விடுதலைப் புலிகள் போராளிகளினதும் உருவப்படங்கள் இன்றைய ஈழநாதத்துடன்இணைக்கப்பட்டுள்ளது. தவறாது பெற்றுக்கொள்ளவும்.

## வரி விளம்பரம்

### வியாபாரிகட்கு

பாடசாலை பாக்குகள், உபகரணங்கள், தரமானஇமிரேசன் கோல்ட் கவரிங் நகைகள், மணப் பெண்களின் சோடனை நகைகள், லேஸ், நூல்வகைகள்அழகுசாதனப் பொருட்களை நிதான விலைக்கு மொத்தமாக பெற்றுக் கொள்ள—ஜெயா அழகு சாதனமாளிகை, 177A, மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி-8366)

### விற்பனைக்கு

அரசாங்க, தமிழீழ விடுமுறை நாட்கள் அடங்கிய படக்கலண்டர்கள் ரூபா 6/-க்கு எம்மிடம் விலாசம் பதிப்பித்து பெற்றுக்கொள்ளலாம். மற்றும் பெரிய, நடுத்தரக் கலண்டர்களுக்கும்- ஶ்ரீலங்கா அச்சகம், ராஜா தியேட்டர் அருகாமை, ஶ்ரீகாந்தா அச்சக லேன், யாழ்ப்பாணம்.

(7140)

### மூக்குக் கண்ணாடி

எவருடைய கமிஷன் அடிப்படை சிபார்சும் இல்லாமல் டாக்டர்களின் மருந்துச் சிட்டைக்கு அமைய உங்கள் கண்களுக்கும்- முகங்களுக்கும் ஏற்ற மூக்குக் கண்ணாடிகளை தாமதம் எதுவும் இல்லாமல் பெற்றுக்கொள்ள நாடுங்கள், மொறாயஸ் 50, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி- 8274)

## இலவசச் சீருடை விநியோகிக்க ஏற்பாடு

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் குரும்பசிட்டி (ஜே. 242) மற்றும் குரும்பசிட்டி கிழக்கு (ஜே. 243) கிராமசேவை அலுவலர்பிரிவுகளை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட இராணுவநடவடிக்கையால் இடம்பெயர்ந்த குரும்பசிட்டி மாணவர்களுக்கு இலவசமாக பள்ளிச் சீருடைகள் வழங்க முன் வந்துள்ளது. இதற்கான நிதியுதவியை கனடாவிலுள்ள குரும்பசிட்டி நலன்புரிச் சபை, மற்றும் சுவிஸ் வாழ் குரும்பசிட்டி இளைஞர்கள் ஆகியோர் வழங்கியுள்ளனர். இத்திட்டத்தால் பயன்பெறத் தகுதியுடையோர் சபையுடன்தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவத்தைப் பெறும்படி சன்மார்க்க சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## BITSMANS

கல்வி நிறுவனம்

மானிப்பாய்

SPOKEN ENGLISH WITH GRAMMAR

by; M. A. ஹரி

B.A. Dip In. Eng

ஆரம்பம்.

15-01-1994

SAT 5. 00 P.M.

நேர அட்டவணை,

SAT. SUN. 5. 00 P.M

(விண்ணப்பங்களை முன் கூட்டியே பதிவுசெய்யவும்)

(சி-8373)

## கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையம்

## ஆண்டுப் பொதுச் சபைக் கூட்டம்

கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையத்தின் 24-வது ஆண்டுப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 15-01-94 சனிக்கிழமை மாலை 3.00மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

நன்றி

சனசமூக நிலைய சேவையில்

தலைவர்

(சி-8371)

## நெல்லியடி மத்திய மகா வித்தியாலய

## பழைய மாணவர் சங்கம்

## ஆண்டுப் பொதுக்கூட்டம் - 1994

## நெல்லியடி சனசமூக நிலையத்தினரின்

# பொங்கல் விழா

நிலையமுன்றலில் ***14-01-1994*** வெள்ளி

பிற்பகல் 4.00 மணி

**தலைவர்: திரு. ஆ. சிவநாதன் அவர்கள்**

**நிகழ்ச்சிகள்:**

மங்கள இசை: நாதஸ்வர வித்துவான் உடுப்பிட்டி ஜெகநாதன் குழுவினர்

1. தலைமையுரை
2. பிரதம விருந்தினர்:

   திரு. செல்லமுத்து சிறினிவர்சன் அவர்கள்

   விசேட ஆணையாளர் (பிரதேச செயலர், வடமராட்சி தெ.மே. பிரதேச சபை)
3. கௌரவ விருந்தினர்:

   திரு. செல்வன் (வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்)
4. சிறப்பு விருந்தினர்:

   திரு. ஆ. இராசேந்திரன் (உதவிக் கல்விப்பணிப்பாளர், பருத்தித்துறை)
5. பரிசில் வழங்கல்.

**கலைநிகழ்வுகள்**

- நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்க சபை பாலர் பாடசாலை மாணவர்களினதும், பழைய மாணவர்களினதும் கலைநிகழ்வுகள்
- திருமதி கிருபாஹரி யோகராசா ஆசிரியரின் மாணவிகளின் நடன நிகழ்வுகள்
- நெல்லியடி மெ. மி. த. க, பாடசாலை மாணவர்களின் நாடகங்கள்:

  1) மயான காண்டம் 2) கவரிமான்
- நாதஸ்வர வித்துவான் ஜெகநாதன் அவர்களை பட்டமளித்துப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்.

**பட்டி மண்டபம்:**

எமது தமிழ்ச் சமுதாய அமைப்பில் குடும்பப் பொறுப்பைப் பெரிதும் தாங்கி நிற்பவர்

ஆண்களா? பெண்களா?

நடுவர்:- கம்பவாருதி திரு. இ. ஜெயராஜ் அவர்கள்

(அமைப்பாளர், அ. இ. கம்பன் கழகம்)

| ஆண்கள் என வாதிடுவோர்: | பெண்கள் என வாதிடுவோர்: |
|---|---|
| 1. திரு. பொன். கணேசமூர்த்தி | திரு. இரா. செல்வவடிவேல் |
| 2. திரு. தி. திருநந்தகுமார் | திரு. த. சிவகுமாரன் |
| 3. திரு. ஆறுதிருமுருகன் | திரு. க. குமாரதாசன் |
| 4. செல்வன் சிறிபிரசாந்தன் | செல்வன் மணிமாறன் |

"இந்தமண் எங்களின் சொந்தமண்" புகழ் எஸ். ஜி. சாந்தன்

"மாவீரர் புகழ் பாடுவோம்" புகழ் கே.ஆர்.சுகுமார்

## இணைந்து வழங்கும் 'இன்னிசை கானம்'

ஆர்மோனியம் — ஶ்ரீபாஸ்கர் வயலின் — கேசவமூர்த்தி

மிருதங்கம் — வேல்மாறன் தபேலா — வரதன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கலைப்பிரிவு -நெல்லியடி சனசமூக நிலையம்

(586)

## MATHS CENTRE NELLIADY

எனதுநிறுவனமாகிய MATHS CENTRE இல் கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட பொதுத்தேர்வுக்கு இடையூறு ஏற்படும் வகையில் நடைபெற்ற நிகழ்வுக்கு மனம் வருந்துகின்றேன்.

எனவே இதுபோன்ற தவறுதலான நிகழ்வுகள் இனிமேல் நடைபெறாது என உறுதி கூறுகிறேன்.

நிர்வாகி,

MATHS CENTRE

(7210)

## புத்தாண்டில்... புத்தம் புது நிகழ்ச்சி

யாழ். ரமணனின்

ராஜன்ஸ் இசையில் சாந்தன்

முதன் முறையாக இணைந்து பாட

ராஜன்ஸ் படைக்கும்

# இன்னிசைப் பொங்கல்

S. G. சாந்தனுடன், ஜெயா சுகுமார், பார்வதி சிவபாதம், வர்ணராமேஸ்வரன். S திவாகர், S. சத்தியசீலன், ஸ்ரனி சிவானந்தன், திருமலை சந்திரன், ஈழத்து மனோ நாவலன் ஆகியோரின் —

**இசைச்சுவை**

"சிற்றி போய்ஸ் டெய்லர்ஸ் ஆதரவில்"

தங்கவேல் செல்வராஜா குழுவினரின்

"சிரியுங்கள் சிந்தியுங்கள்"

**நகைச்சுவை**

மாஸ்ரர் T. கஜேந்திரனின் ஓர்கன் இசை

(13ஆம் ஆண்டு பரியோவான் கல்லூரி மாணவன்)

இடம் ; வேம்படி மகளிர் கல்லூரி

காலம்; 14 01-1994

நேரம்: பி. ப. 2.30, மாலை 7 மணி

டிக்கெற்: 100/-, 50/-

கிடைக்கும் இடம்;

மணிக்குரல் விளம்பர சேவை

(7207)

## நினைவு கூருகின்றோம்..

1994-01-13

மேற்படி பொதுக்கூட்டம் 30-01-1994 ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப. 9 30 மணிக்கு வித்தியாலயத்தின் "L" மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு சகல பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

கூட்டத்திற்கான பிரேரணைகள் 20-01-1994க்கு முன் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சிதம்பரப்பிள்ளை பிரபாகரன்
14-01-1994 (7209) செயலாளர்.

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:

12.10.1961

மறைவு :

30.12.1989

பிரபல வைத்தியரும், சோதிட நிபுணருமான

மயில்வாகனம் பொன்னுத்துரை மகள்

### செல்வி தேவரதி (ரதி)

திதி: 13-1-1994


ரதியே! உன்னைத்தேடி வந்த எங்கள் கண்களிலே நீ கண்ணீரையல்லவா விட்டுச் சென்றாய்.

உன் நினைவால் வாடும்

**அம்மா, அண்ணாமார், அக்காமார், அத்தான்மார், அண்ணிமார்,**
பெறாமக்கள்: சி. சந்திரவர்ணன்,
பொ. மகேஸ்வரன்
(புறோக்கர், சாத்திரியார்)

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.
(7202)

## பிறந்த நாள் நினைவலைகள்



# மேஜர் அழகன்

(செல்வராசா இளங்கோ)

கல்வயல் சாவகச்சேரி

மலர்வு **1966-01-13**

வீரச்சாவு **1992-06-29**

ஈழத்து வானத்தில் மின்னும் ஒரு தாரகை நீ
காலத்தை வென்றவனே - எம் அழகா!
வாழ்கின்ற தமிழீழ வரலாற்றில் - என்றும்
வாழ்கின்ற வரலாறு உந்தனுக்கு!
பெற்றவர்க்கும் - உடன் பிறந்தார்க்கும் - உன்
உற்றவர்க்கும் மட்டும் தான் உன் இழப்பு இழப்பா அல்ல
நற்றமிழ் தாய்க்கு - நம் இனத்துக்கு
பெற்றெடுக்கப் போகும் தமிழ் ஈழத்திற்கு
வற்றாத் துயர் ஈயும் வரலாறு உன் வாழ்வு

11|1, செம்மணி ஒழுங்கை,
அரியாலை,
யாழ்ப்பாணம். (சி|8346)

குளோபல் இன்ஜினியறிங்
ரெக்னோலொஜி சேவிஸ்
32, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் திருகோணமலை - தம்பலகமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1987ஆம் ஆண்டு தமிழகத்திலிருந்து தமிழீழம் வரும்போது தமிழீழக் கடற்பரப்பில் வைத்து சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**பண்டிதர்** (அரியநாயகம் சாந்தசீலன் - சாம்பல்தீவு - திருமலை)

**கோவிந்தன்** ( — தயாபரன் - நிலாவெளி - திருகோணமலை)

**ஜஸ்ரின்** (சந்தனம் செல்வராசா - 6-ம் கட்டை, சாம்பல்தீவு - திருகோணமலை)

**வேதமணி** (அப்புச்சாமி சிவலிங்கம் - இசங்கங்குளம் - மன்னார்)

**2-ம் லெப். மகேந்திரன்** (செட்டிகுளம் - வவுனியா)

**கிறிஸ்ரி** (கிளிநொச்சி)

**ஜோய்** (செபஸ்ரியாம்பிள்ளை அல்பிரட் யோசப் - குருநகர் - யாழ்)

1988ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இந்தியப் படையினராற் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து கொலை செய்யப்பட்ட வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1989ஆம் ஆண்டு வவுனியா - மன்னார் வீதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். ஜெசி** (சிவலிங்கம் ரவீந்திரன் - பாவற்குளம் - வவுனியா)

யாழ் - பண்டத்தரிப்பு, கீரிமலை வீதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இளந்தாய், பெண்குழந்தை, மற்றுமொரு சிறுமி.

1991ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட வந்தாறுமூலையைச் சேர்ந்த தமிழ்ப்பெண், சுட்டுக் கொல்லப்பட்ட இளம்பெண், இளைஞன் உட்பட ஏறாவூர், மயிலம்பாவெளி பகுதிகளைச் சேர்ந்த 05 தமிழர்கள்,

1993ஆம் ஆண்டு மணலாறு - சிலோன் தியேட்டர் முகாமுக்கும், முந்திரிகைக்குள முகாமிற்குமிடையில் அமைந்த சிறிலங்கா காவலரண்கள் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**லெப். குமணன்/சீவராஜ்** (சின்னத்துரை சிவகுமார் - செங்கலடி - மட்டு)

**ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்.**
(சி-8369)

## சிந்தனைக்கு

உரத்து ஆர்ப்பரிக்கும் புயல்காற்று, விரைவில் வீசி ஓய்ந்து விடும்.

-- டொபையாஸ் ஸ்மாபெட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 13-01-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05

# தென்னாசிய ஜனநாயகம்

இந்தியாவை ஒரு சர்வாதிகாரியே ஆள வேண்டும் என்பதையே இந்திய நகர்ப் பகுதியில் வாழும் பெரும்பான்மை மக்கள் விரும்புவதாக அண்மையில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பொன்று தெரிவிக்கின்றது. இக் கருத்துக் கணிப்பில் 58 வீதமான மக்கள் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இந்திய மக்களின் இவ்விருப்பத்திற்கான காரணமென்ன? ஜனநாயகத்தில் ஏற்பட்ட வெறுப்பா? ஜனநாயகம் மேற்கில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒன்று என்ற கருத்தா? அல்லது மன்னராட்சியும், சர்வாதிகாரமுமே எமது பாரம்பரியம் எனக் கருதுகின்றனரா. ஜனநாயகம் அந்நியமானதென்றால் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களில் ஏன் வெறுப்பு ஏற்படவில்லை? அத்தோடு, அந்நியர் வெளியேறி சுமார் 45 வருட காலங்கள் ஏன் இதற்குச் சென்றது?

ஆனால், மேற்கூறப்பட்ட வினாக்கள் எழுப்பப்படினும் இவற்றில் எவையும் பொருத்தமான கேள்வியாக அமையவில்லை என்றே கூறவேண்டும். உண்மையில், இந்திய நகர மக்கள் ஜனநாயகத்தில் வெறுப்புக் கொண்டுள்ளார்கள் என்பதை விட ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கிய அரசியல் வாதிகளால் சலிப்படைந்து போய்விட்டார்கள் என்பதே உண்மையாகும்.

குடியேற்ற காலத்தில் ஏனைய அம்சங்கள், தேவைகள் ஏகாதிபத்தியங்களிடம் இருந்து இறக்குமதி செய்யப்பட்டபோது அதன் தொடர் நிகழ்ச்சியாக ஜனநாயக அமைப்பும் இறக்குமதி செய்யப்பட்டது. ஜனநாயக ஆட்சி அமைப்பானது கொள்கை அடிப்படையில் சிறப்பான பண்புகளைக் கொண்ட ஆட்சி அமைப்புமுறை என்பதில் சந்தேகப்பட ஏதுமில்லை. ஆனால், ஜனநாயக முறைக்கு அபகீர்த்தியையும், கெடுதியையும் ஏற்படுத்தியவர்கள் அரசியல்வாதிகள் ஆகும்.

ஜனநாயகத்தின் பெயரால், தென்னாசிய நாடுகள் ஒவ்வொன்றிலும் பல கட்சிகள் உருவாகியுள்ளன. இக் கட்சிகளின் கொள்கை என்பது, கட்சித் தலைமையின் விருப்பு வெறுப்பு என்பதே ஒழிய கட்சிக்கு என்றதொரு தனித்துவமான கொள்கை இருப்பது கேள்விக்குரியதொன்றே: இந்நிலையில், கட்சி அங்கத்தவர்களின் கொள்கைகளும் தேவைக்கேற்ப மாறுபவையாகவும், மாற்றியமைக்கப்படுபவையாகவும் உள்ளன.

# பிரச்சினைக்கு சமரச தீர்வு; கதவுகள் திறந்தே உள்ளன

## செல்லச்சாமி தெரிவிப்பு

''பிரச்சினைகளைச் சமரசமாகத் தீர்த்து வைப்பதற்கு சமாதானத்தின்கதவுகள் திறந்திருக்கும்'' இவ்வாறு இ. தொ. கா. பொதுச் செயலாளர் திரு எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக செல்லச்சாமி கடந்த வாரம் விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது, இ தொ. காவின் பொதுச் செயலாளர்பதவியில் இருந்து விலகுமாறும்அதற்கு 15நாட்கள்காலக் கெடுகொடுத்திருப்பதாகவும்அதன் தேசியசபைக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் எனது கைக்கு இன்னமும் கிடைக்கவில்லை. பத்திரிகைகள் வாயிலாகவே நான் அறிந்து கொண்டேன் ஆனால் கொழும்பில் உள்ள இ. தொ. காவின் தலைமையகத்தில் உள்ள எனது அலுவலகத்தின் கதவுகள் உடைக்கப்பட்டு ஆவணங்கள் வெளியில் போடப்பட்டதாககிடைத்த தகவல்களை உறுதிப்படுத்திய பின்பே நான் நீதிமன்ற நடவடிக்கையை எடுத்தேன்.

பின்னர் நானும் தலைவர் தொண்டமானும் தனிமையில் சந்தித்து ஒன்றரை மணித்தியாலயம் பேசினோம்; சமாதானத் தீர் விலேயே நான் எப்போதும் நாட்டம் கொண்டவன்.

கடந்த 4ஆம்திகதி நானும் எமது தலைவரும் எமது காரியாலயத்துக்குச் சென்றோம் அங்கு எம்மைச் சூழ்ந்து கொண்ட ஊழியர்கள் பிரிந்து செல்லவேண்டாம் என்று என்னைக் கேட்டுக் கொண்டனர் இதன் பின்னர்நானும் தலைவரும் மீண்டும் பேச்சுவார்த்தை நடாத்தினோம்.

ஆனால் தற்போது தேசிய சபையின் தீர்மானத்தையே அமுல் நடாத்துவேன் என்று தலைவர் கூறியிருக்கிறார்.

சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கானபூரண அதிகாரத்தை தேசியசபைத் தலைவருக்கு அளித்து விட்ட போதும் கூட தலைவர் இவ்வாறு கூறியிருக்கிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

## திகதி நீடிப்பு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடாத்தப்படும் வதிவிட வேளாண்மைப் போட்டியானது யாழ் மாவட்டத்தில் கூடுதலான மழைவீழ்ச்சி காணப்பட்டதன் பிரகாரம் 31-01-94 வரை விண்ணப்ப முடிவுத் திகதி போட்டியாளர் நலன் கருதி நீடிக்கப்பட்டுள்ளது.

போட்டிகள் பார்வையிடற் காலம் முதலாம் கட்டப் பார்வையிடல் 01-03-94 தொடக்கம் 20-03-94 வரையான காலப் பகுதியினுள் நடைபெறும்.

## ஏழை மாணவனின் சோகக்கதை

# சப்பாத்து அணிந்து வர பணிப்பு பல்கலை மாணவன் தற்கொலை

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக் கழக மருத்துவ பீட மாணவன் பிரசன்ன உதயஜீவனின் மரணம் தற்கொலையென்று விசாரணைகளிலிருந்து தெரிய வருகிறது என்று கட்டுகஸ்தொட்ட பொலிசார் தெரிவித்தனர் பிரேத பரிசோதனை நடத்தியசட்ட வைத்திய அதிகாரி கிருமிநாசினி நஞ்சும் நீரில் மூழ்கியமையும் காரணமாக இருக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

23 வயதான இந்த மாணவன் கடந்த திங்கட்கிழமை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தன்னைப் பதிவு செய்துகொண்டிருந்தார். இரு நாட்களின் பின் புதன்கிழமை இவரது வீட்டிற்கு அருகிலுள்ள கிணறொன்றில் சடலம் மிதந்து கொண்டிருக்கக் காணப்பட்டது- இந்த சடலத்தின் கால்கள் கயிறொன்றினால் கட்டப்பட்டிருந்தன சடலத்தில் சேட் மட்டுமே அணிந்திருக்கக் காணப்பட்டது. இவர் அணிந்திருந்த சாரம் ஒரு பக்க மூலையில் காணப்பட்டது.

இந்த இளைஞர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற கருத்தே விசாரணை நடத்திய அதிகாரிகளுக்குத் தோன்றியது.

மிகவும் அமைதியான சுபாவம் கொண்ட இந்த மாணவர் வெளியுலக நடவடிக்கையில் அவ்வளவாக ஈடுபடுவதில்லை என்று விசாரணை நடத்திய கட்டுகஸ் தொட்ட பொலிசார் தெரிவித்தனர் பெருமளவு நேரத்தை இவர் படிப்பிலே செலவிட்டு வந்தார். இவரது வீட்டில் மின்சாரம் இல்லை. கைவிளக்கின் உதவியுடனே இவர் கல்வி கற்றார்.

முதல்நாள் பல்கலைக் கழகத்திற்கு பதிவிற்காகச் சென்றிருந்தார். லோங்சும், சேர்ட்டும், செருப்பும் அணிந்து சென்றார். சில மாணவர்கள் இவர் செருப்பு அணிந்து வந்தது பற்றிக் குறிப்பிட்டு விசாரித்ததோடு சப்பாத்துக்களை அணியுமாறு கூறினர். இச் சம்பவம் திங்களன்று நடைபெற்றது. செவ்வாயன்று இவர் வீட்டிலேயே தங்கியிருந்தார். சடலம் காணப்பட்ட கிணற்றுக்கட்டில் பிளேட் ஒன்றை பொலிசார் கண்டுபிடித்தனர். இந்த பிளேட் இவர் சவரம் செய்வதற்குப்பயன்படுத்தும் பிளேட் ஆகும். இவரது கால்களில் கட்டப்பட்டிருந்த கயிறு இவர்களது நாயைக் கட்டப் பயன்படுத்தப்பட்டதாகும்- சடலத்தில் எவ்வித காயங்களும் இருக்கவில்லை இவரது மரணம் குறித்த விசாரணை தொடர்ந்துநடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# இ.தொ.கா. செயலாளராக சதாசிவம்நியமனமாகலாம்?

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் உதவித்தலைவரும், மத்திய மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சருமான எஸ். சதாசிவம் தொழிலாளர் காங்கிரசின் புதிய பொதுச்செயலாளராக நியமிக்கப்படலாம் என்று இ. தொ. கா வட்டாரங்கள் கூறியுள்ளன.

இ. தொ. கா வினுள் ஏற்பட்ட நெருக்கடி நிலையை போக்க சிலர் எடுத்த முயற்சிகள் பயனளிக்காததாலேயே பொதுச்செயலாளர் பதவிக்கு சதாசிவம் நியமிக்கப்படவிருப்பதாக மேலும் கூறப்படுகிறது

இதேவேளை அடுத்த மாதத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அமைச்சரவை மாற்றத்தின் போது ராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.செல்லச்சாமிக்கு அமைச்சரவை அந்தஸ்துடைய பதவி வழங்கப்படலாம்என்பதுந் தெரிந்ததே

## பாலம் திருத்தப்படும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை - சாவகச்சேரி வீதியில் உள்ள கப்புதூ ஐந்து கண் பாலம் வெகு விரைவில் திருத்திப் புனரமைக்கப்படும் என யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார். இப்பாலத்தின் முக்கியத்துவத்தினைக் கருதியே இப்பாலம் திருத்திப் புனர்மைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (25)

## கணிதபாட செயலமர்வு

க. பொ. த (சா. த) 1993 முன்னோடிப் பரீட்சையில் ஏனைய பாடங்களில் சித்தியடைந்து கணித பாடத்தில் சித்தியடையாத மாணவர்களுக்கான விசேட செயலமர்வு வரும் ஜனவரி 28ஆம் திகதி பி. ப 3மணிக்கு ஆரம்பமாகவுள்ளது செயலமர்வில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தமது பெயர்களை வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்யுமாறு உதவிக் கல்விப் பணிப்பாளர் (விஞ்ஞானம்) கேட்டுக் கொண்டுள்ளார் பெயர்களை கோப்பாய், வி அமைந்துள்ள யாழ். மாவட்டக் கணித - விஞ்ஞான மூலவள நிலையம் அல்லது கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்தில் அமைந்துள்ள வடமராட்சிக்கான கணித - விஞ்ஞான வளநிலையத்தில் பதிவு செய்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது

# 'ராஜ்பவனி'ன் அறிக்கைக்கு தமிழக அரசு மறுப்பு

(சென்னை)

சென்னையிலுள்ள ஆளுநர் மாளிகையான ராஜ்பவனிலிருந்து கடந்த திங்களன்று வெளியிடப்பட்ட அறிக்கைக்கு தமிழக அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது.

ஆளுநருக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு ஒருபோதும் குறைக்கப்படவில்லையெனவும் ராஜ்பவன் இத்தகைய செய்திகளை வெளியிடுவது சரியல்ல எனவும், தமிழக அரசு தெரிவித்துள்ளதோடு ராஜ்பவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்த அனைத்து குற்றச் சாட்டுகளையும் மறுத்துள்

# சுயாட்சி பிரதேசத்தின் விஸ்தீரணம் விட்டுக்கொடுக்க பி. எல். ஓ. விருப்பம்

(டெல்அவிவ்)

ஜோர்தான் ஆற்றுக்குக் குறுக்கேயுள்ள நகரமான ஜெரிக்கோவிற்கு அருகே இருநூறு சதுர கிலோமீற்றர் பிரதேசத்தில் சுயாட்சி வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கான திட்டத்தை அமுல் செய்வதில் இந்த விடயமே பிரதான தடங்கல் என்பது குறிப்பிடத்தக்கது

இஸ்ரேலுக்கும் பாலத்தீனிய விடுதலை இயக்கத்திற்கும் இடையிலான சுயாட்சிப் ... வில்இடம்பெற்று வருகின்றன பாலத்தீனிய சுயாட்சிப் பிரதேசத்தின் அளவு பாலத்தீனிய மற்றும் யூதக் குடியிருப்புக்களின் பாதுகாப்பு எல்லைக்கட்டுப்பாடு என்பன தொடர்பான விடயங்களில் இன்

தொன்றே: இந்நிலையில், கட்சி அங்கத்தவர்களின் கொள்கைகளும் தேவைக்கேற்ப மாறுபவையாகவும், மாற்றியமைக்கப்படுபவையாகவும் உள்ளன.

இந்த வகையில், ஒரு நேரத்தில் ஒரு கட்சியில் இருப்பவர் அடுத்த நேரம் அதே கட்சியில் இருப்பார் என்பது தெளிவாகக் கூறிவிட முடியாது. தேர்தலில் போட்டியிடும்போது ஒரு கட்சியில் இருப்பவர் தேர்தல் முடிவு வரும்போது அதே கட்சியில் இருப்பாரா என்ற பரிதாப நிலையே தென்னாசியாவில் இன்று நிலவுகின்றது.

அதிலும் குறிப்பாக, உறுதியற்ற அரசாங்கங்கள் இருக்கும்போதும், அதிகார ஆசை கொண்ட பிரதிநிதிகள் இருக்கும்போதும் பாய்ச்சல்களும், தாவல்களும் சர்வசாதாரணமானவை என்றே கொள்ளலாம். இதில் உறுதியற்ற அரசாங்கங்களின் பணபலமும், பதவிகளுக்கான உத்தரவாதங்களும், கொள்கையற்ற அதிகார ஆசை பிடித்த பிரதிநிதிகளை அங்குமிங்குமாக ஊசலாட வைக்கின்றது.

இந்தவகையில், மக்களின் விருப்பு, வெறுப்பு அவர்கள் எதற்காக வாக்களித்தார்கள், அவர்களுக்கு நாம் கொடுத்த வாக்குறுதிகள் என்பன எல்லாம் இரண்டாம் மூன்றாம் பட்சமானவையாகவும், அநேகமானவை மறக்கப்பட்டவையாகவுமே உள்ளன. எடுத்துக்காட்டாக, இந்தியாவில் 1991இல் நடந்த பொதுத் தேர்தலில் ஜனதா தளத்தின் சார்பில் போட்டியிட்ட-வெற்றியீட்டிய 20 எம். பிக்கள் தற்பொழுது காங்கிரஸ் கட்சியில் இருக்கின்றனர். இதே போன்று ஆறு தெலுங்கு தேசம் கட்சி எம். பிக்கள் காங்கிரஸ் கட்சியில் இன்றுள்ளனர்.

இதை ஒத்ததாகவே சிறிலங்காவில் இ. தொ. கா. சார்பில் போட்டியிட்ட ஏழு மத்திய மாகாண சபை உறுப்பினர்கள் இன்று ஐ. தே. கவுடன் கூட்டாகவுள்ளனர் அத்தோடு, இராஜாங்க அமைச்சரான இ தொ. கா. உறுப்பினர் ஒருவரும் கட்சிக் கொள்கை தலைவரின் பணிப்பு என்பதை விட அமைச்சரவையில் அங்கம் பிடிக்கும் அதிகார ஆசையைக் கொண்டே செயற்படுகின்றார்

ஒருகட்சியில் இருந்து மக்களால் தெரிவு செய்யப்படும் உறுப்பினர் ஒருவர்மற்றக் கட்சியில் சேருவதானால் மக்கள் ஏன்இவருக்கு வாக்களிக்க வேண்டும். மற்றைய கட்சிக்கு நேரடியாகவே வாக்களிக்கலாமே. இடையில் ஒரு தரகரை ஏன் தேட வேண்டும்? இவ் அவலநிலையாலேயே இந்திய நகரப் பகுதி மக்கள் சர்வாதிகாரமே சிறந்ததெனக் கருத முற்பட்டனர். இது தனியாக இந்தியாவின் நகரத்திற்கு மட்டுமல்ல; அதன் கிராமங்களுக்கும், ஏன் தென்னாசிய நாடுகள் அனைத்துக்குமே பொருத்தமானது என யாராவது வாதிட முனையினும் தவறு இருப்பதாக இல்லை. அந்தளவிற்கு தென்னாசியாவில் ஜனநாயகம் கேலிக்குரியதாகியுள்ளது.

---

தெரிவித்துள்ளது.

ஆளுநருக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு ஒருபோதும்

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்த அனைத்து குற்றச் சாட்டுகளையும் மறுத்துள்ளது.

---

தமிழ் நாட்டில்

# தமிழில் தந்தி அனுப்பவசதி நாளை முதல் அமுலாகும்

தமிழில் தந்தி அனுப்பும் முறை தமிழ்நாட்டில் நாளை பொங்கல் தினம் முதல் அமுலுக்கு வரவுள்ளது. கோயம்புத்தூர், சென்னை, ஈரோடு, மதுரை, பாண்டிச்சேரி, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தூத்துக்குடி, வேலூர் ஆகிய நகரங்களில் இருந்தும் சென்னையிலுள்ள மூன்று மண்டல அலுவலகங்களில் இருந்தும் தமிழில்தந்தி அனுப்புவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த சேவை செயல்பாட்டையும் தேவையையும் பொறுத்து படிப்படியாக தமிழ்நாடு முழுவதற்கும் விரிவாக்கப்படும் எனவும் தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் மேலும் கூறப்பட்டுளளது.

# தேர்தல்நியாயமாக நடப்பது உறுதிப்படுத்துவது அவசியம்

## இந்திய தேர்தல் ஆணையகம்

(டில்லி)

பத்து மாநிலங்களில் ஒரே நேரங்களில் நடைபெறவுள்ள சட்டப்பேரவைத்தேர்தலின்போது மத்திய மாநில பொலிஸ் படைகளை எவ்வளவுக்கு பயன்படுத்திட இயலும் என்பது பற்றி இம்மாத முடிவுக்குள் அறியத்தருமாறு தேர்தல் ஆணையகம் மத்திய அரசைக் கேட்டுள்ளது. இது தொடர்பாக தேர்தல் ஆணையகம் மத்திய அமைச்சரவைச்செயலாளருக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் எழுதியுள்ள கடிதத்தில் இந்தப்படைகள் ஓரிடத்திலிருந்துமற்றஇடத்திற்கு நகர்த்த எடுக்கும் கால அவகாசம் என்பன பற்றியும் எடுத்துரைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது

நியாயமான வகையில் சுதந்திரமான தேர்தல்களை நடத்துவதற்குஇயலும் என்று உறுதிப்படுத்திக் கொள்ளும் வரை தேர்தல்கள் நடத்துவதற்கு உத்தரவிடப் போவதில்லை எனவும் தேர்தல் ஆணையகம் கூறியுள்ளது

சிக்கிம், ஆந்திரப்பிரதேசம் கர்நாடகா, கோவா, மணிப்பூர் பீகார், குஜராத், மகாராஷ்டிரா ஒரிசா, அருணாசலப் பிரதேசம் ஆகியவற்றின் பதவிக்காலம் இவ் ஆண்டு டிசம்பர் முதல் 95 மார்ச் மாதத்திற்கு இடையிலான காலப்பகுதிக்குள் முடிவடையஇருப்பது தெரிந்ததே.

# பாகிஸ்தானின் அச்சுறுத்தல் உள்நோக்கமுடைய மிரட்டல்

## இந்தியா தெரிவிப்பு

காஷ்மீர் பிரச்சினை அமைதியான வழியில் தீர்க்கப்படாவிட்டால் தெற்கு ஆசியாவில் அணு ஆயுத யுத்தம் ஏற்படலாம என்று கூறும் பாகிஸ்தானின் மிரட்டல் உள்நோக்கமுடைய வெறும் அச்சுறுத்தல்தான் என்று இந்தியா கூறியுள்ளது.

உஸ்பெஸ்கிஸ்தானில் பாகிஸ்தானின் வெளியுறவு அமைச்சர் வெளியிட்ட அறிக்கை தொடர்பாக செய்தியாளர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த இந்திய வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் மேலும் கூறுகையில் இஸ்லாமாபாத்திடம்ஒரேயொருவிடயாலோசனை அம்சம்தான் இருக்கிறது என்றும் தெரிவித்தார் அத்துடன் காஷ்மீர் பிரச்சினை தொடர்பாகபாகிஸ்தான்அரசு திரும்பத்திரும்ப ஒரே விடயத்தைத்தான் கூறி வருகிறது இந்தியாவின் நிலை இதற்கு மாறாக தெட்டத் தெளிவாகவேஇருப்பதாகவும் குறிப்பிட்டார்

---

இருநூறு சதுர கிலோமீற்றர் பிரதேசத்தில் சுயாட்சி வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை பாலத்தீனிய விடுதலை இயக்கம் கைவிட்டுள்ளது. இதை விடவும் குறைவான பிரதேசத்தில் சுயாட்சி அமைப்பதற்கு பாலத்தீனிய விடுதலை இயக்கம் விருப்பம் தெரிவித்துள்ளபோதும் கூட சுயாட்சி பிரதேசத்தின் விஸ்தீரணம் தொடர்பான பிரச்சினை இன்னமும் முடிவுக்கு வரவில்லை. கடந்த ஆண்டில் ஏற்பட்ட பாலத்தீனிய சுயாட்

குறிப்பிடத்தக்கது

இஸ்ரேலுக்கும் பாலத்தீனிய விடுதலை இயக்கத்திற்கும் இடையிலான சுயாட்சிப் பிரதேசம் பற்றிய புதிய சுற்றுப் பேச்சுவார்த்தைகள் எகிப்திய நகரமான டாவா

னிய மற்றும் யூதக் குடியிருப்புக்களின் பாதுகாப்பு எல்லைக்கட்டுப்பாடு என்பன தொடர்பான விடயங்களில் இன்னமும் இணக்கப்பாடு ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானில் அமைதி ஏற்பட புதிய முயற்சிகள் வேண்டும்

(டில்லி)

ஆப்கானிஸ்தானில் அமைதியையும், நிலையான ஸ்திரத்தன்மையையும் ஏற்படுத்த மீண்டும் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இந்தியா தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் காணப்படும் நிலை தொடர்பாக இந்தியாவின் கவலையை வெளியிட்ட வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் மேலும் கூறுகையில், இந்த நடப்புக்களின் விளைவாக, பெரும் உயிரிழப்புகளும், உடைமை இழப்புகளும் ஏற்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்.

ஆப்கானில் நிலவும் அரசியல் மற்றும் பாதுகாப்பு நிலை தொடர்பாக சர்வதேச சமூகம் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும் எனவும், குறிப்பாக இந்தப் பிராந்திய நாடுகளும் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் விண்ணப்பித்தார்

இதேவேளை ஆப்கானிலுள்ள இந்தியாவின் ராஜீய பிரதிநிதிகளும் காரியாலய அலுவலர்களும் லாகூரிலிருந்து விமானம் மூலம் இந்தியாவிற்கு வந்து சேர்ந்துள்ளனர்.

# ஐ. ஆர். ஏ. செய்திகளுக்கு அயர்லாந்தில் தடை நீக்கம்

(அயர்லாந்து)

ஐ. ஆர். ஏ. எனப்படும் அயர்லாந்து குடியரசு இராணுவம் பற்றிய செய்திகள் ஒலிபரப்பு செய்வதற்கு விதித்திருந்த தடையை அயர்லாந்து அரசாங்கம் நீக்கியுள்ளது. கடந்த இருபதாண்டுகளுக்கும் மேலாக ஐ. ஆர். ஏ. பற்றிய வானொலி செய்திகளுக்கும், ஒளிபரப்புக்கும் அயர்லாந்து அரசாங்கம் தடைவிதித்து இருந்தது.

எனினும் இங்கிலாந்து-அயர்லாந்து சமாதானத் திட்டத்தை ஐ ஆர் ஏ. இயக்கம் ஏற்கச் செய்வதற்கான ஒருமுயற்சியாக இந்தத்தடை நீக்க உத்தரவு பிறப்பிக்கப்படவுள்ளது.

இதன் காரணமாக ஐ. ஆர் ஏ. யின் அரசியல் பிரிவுத் தலைவரான ஜெரி அடம்ஸ், அயர்லாந்தின் ஒளிபரப்பிலும், ஒலிபரப்பிலும் இடம் பெறுவதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது.

# பொஸ்னியாவில் விமானத் தாக்கு நேட்டோ அணி தீர்மானம்

(பிரஸ்ஸல்ஸ்)

பெல்ஜியத்தின் தலைநகர் பிரஸ்ஸலசில் அமெரிக்கா தலைமையில் நடந்த நேட்டோ அணி நாடுகளின் இரண்டு நாள் மாநாடு நேற்று முன் தினம் முடிவடைந்தது.

பொஸ்னியா பிரச்சினை தொடர்பாக இங்கு ஆராயப்பட்டபோது, அவசியம் ஏற்படின் பொஸ்னியாவில் ஐ நா. துருப்புகளுக்கு ஆதரவாக விமானத் தாக்குதல் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இம் முடிவிற்கு ஐ. நாவின் செயலாளர் பூட்ரோஸ் பூட்ரோஸ் காலி வரவேற்பு தெரிவித்துள்ள அதேசமயம்பொஸ்னியா சேர்பியா தலைவர்கள் கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 12 - 01 - 1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 195

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்
42-2862, 26-4139, 26-0535, 24-5396, 26-1221
26-1169, 26-9658, 24-3906, 42-8316, 26-7540
22-4766, 28-3528, 42-7312, 26-7949, 41-2151
41-1531, 26-8138, 28-0523, 24-0576, 40-1214
26-0767, 24-6475, 27-7043, 26-8674.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்
26-2125, 24-7327, 26-2414, 26-0672, 26-6461
26-6628, 24-4917, 27-2088, 24-6855, 27-2056
26-8051, 26-3162.

## புரோயிலர் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

பிறிமா லோமன் (PRIMA LOHMAN) புரோயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மற்றும் சிங்கப்பூர் (FOWL FOX) பவுல் பொக்ஸ், றனிகட் (RANI GATE) ஊசி மருந்து வகைகளும் உடன் விற்பனைக்குண்டு.

''மல்லிகாபதி''
சந்தை கிழக்கு ஒழுங்கை,
மானிப்பாய்.

(7214)

## விவசாயபீட மாணவர்கள் கவனத்திற்கு

அனைத்து மாணவர்களும் இன்று (13-01-94) பிற்பகல் 2 மணியளவில் பல்கலைக்கழக வளாகத்தில் ஒன்றுகூடும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

(7213) - மாணவர் பிரதிநிதி

## கற்கோவளம் ஸ்ரீகும்பிமுத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலனசபை

7-01-1994-ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இவ்வாண்டிற்கான நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

போஷகர் - சி. பரஞ்சோதி
(ஓய்வு பெற்ற அரசஎழுதுவினைஞர்)

தலைவர் - வை. சோமசுந்தரம்

செயலாளர் - சி. பாஸ்கரன்

பொருளாளர் - எஸ். குணசேகரம்

உப-செயலாளர் உட்பட ஏழு நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவாகினர்.

வை. சோமசுந்தரம் சி. பாஸ்கரன்
தலைவர் (7212) செயலாளர்


# இளைஞர்கள், யுவதிகள் உட்பட புறக்கோட்டையில் 92தமிழர்கள் கைது

(கொழும்பு)

புறக்கோட்டைப் பகுதியில் தனியார் விடுதிகளில் தங்கியிருந்த வடகிழக்கைச் சேர்ந்த 86இளைஞர்களும் ஆறு யுவதிகளும் புறக்கோட்டைப் பொலிசாரால் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் சிலர் மட்டுமே விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் பற்றிய முழு விபரங்களும் புலனாய்வு பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், இவை பரிசீலனை செய்யப்பட்டதும் தேசிய புலனாய்வு பொலிசாரின் அறிக்கை கிடைத்தவுடன் விடுதலை செய்யப்படுவார்கள் என புறக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி யூ. ஏ. ஆர். கல்கமுவ தெரிவித்துள்ளார்.


## விக்னா

## கல்வி நிறுவனம்

கணக்கியல்
திரு. SK பிரபாகரன்
93 பரீட்சையில்
தோற்றியவர்களுக்கு
மீட்டல்

A/L 94 DAYCLASSES
Mon, TUE, THU, (8-00-10-00)
(10-00 - 12-00)

A/L Sat, Sun
1-30 - 3-00

A/L 95 Sat, Sun
(12-00 - 1-30)

ஃ ஒவ்வோர்பாடஅலகும் கடந்த கால வினா விடைகளுடன் செய்யப்படும்.

(சி-8352)

## விக்னா

## கல்வி நிறுவனம்

அளவையியல்
திரு. விக்கி
93 பரீட்சையில்
தோற்றியவர்களுக்கு
மீட்டல்
(Sat, Sun)

ஆரம்பம்:
15 01-94
காலை 7-30 - 9-00

(சி-8353)


### வேலணை பலநோக்கு கூ. சங்கம்

# லொறிகொள்வனவுகுறித்து பொதுச்சபையில் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

வேலணை ப. நோ. கூ. சங்க லொறி கொள்வனவு தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சையினால் பொதுச்சபைக் கூட்டத்திலிருந்து உறுப்பினர் ஒருவர் வெளிநடப்புச்செய்தார்.

வேலணை ப. நோ. கூ. சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் கடந்த ஞாயிறு சங்க தலைமை அலுவலகத்தில் நடைபெற்றபோது 26 சிறி 873 இலக்கத்தையுடைய லொறிக் கொள்வனவு தொடர்பான விவாதத்தில் உறுப்பினர் ஒருவர் மேற்படி லொறிக் கொள்வனவை ஏற்றுக்கொள்ள முடியாதெனக் கூறி வெளிநடப்புச் செய்தார்.

மேற்படி லொறிக் கொள்வனவு தொடர்பாக வெளிநடப்புச்செய்த உறுப்பினரிடம் கேட்டபோது இந்த லொறி தமிழீழத்தை விட்டு வெளியேறியவருடையது எனவும் இதை மேற்படி சங்கம் கொள்வனவு செய்து அதற்கான பணத்தை கொழும்பில் வசிக்கும் அதன் உரிமையாளரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் அத்துடன் இதன் கொள்விலையும்ஆட்சேபனைக்கு உரியது எனவும் இதனால் இந்த லொறிக்கொள்வனவை ஏற்றுக்கொள்ள முடியாது எனக்கூறினார்.

### கிழக்கு

சபைகள், தமிழீழ விடுதலை ஸ்தாபனம் ஒருசபை, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி மூன்று சபைகள், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி ஒரு சபை, முஸ்லிம் ஐக்கிய விடுதலைமுன்னணி ஒருசபை, சிறிலங்கா சுதந்திரக்கட்சி 21சபைகள், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 27 சபைகள், 50 சுயேட்சைக் குழுக்கள் 31 சபைகளில் போட்டியிடுகின்றன. மொத்தம் 431 அங்கத்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட இருக்கின்றனர். 732 இளைஞர்கள் உட்பட 2013 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். நான்கு மாவட்டங்களிலும் 777 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட இருக்கின்றன.

### பற்சிகிச்சை

களைத் தொடர்ந்தே இவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### பேச்சுவார்த்தை

அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுகளின் தொடரை இப்போது அமைச்சர் தொண்டமான் பக்கத்தில் இருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று பொதுச் செயலாளர் தெரிவித்திருப்பது குறித்து அமைச்சரிடம் கேட்டபோது, ''சமாதானப் பேச்சு தொடர வேண்டுமானால் மத்திய மாகாண சபை உறுப்பினர் எட்டுப் பேரும் முதலில் இராஜினாமாச் செய்ய வேண்டும் அதன் பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்படமுடியும்'' என்றார்.

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழுவினால் நடாத்தப்படும் வலயரீதியில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையேயான மாவட்ட மட்ட உதைபந்தாட்ட போட்டித் தொடரின் இன்றைய போட்டியில் புங்குடுதீவு அம்பாள் விளையாட்டு கழகத்தை எதிர்த்து ஞான முருகன் விளையாட்டு கழகம் மோதுகின்றது.

மேற்படி போட்டி இன்று மாலை 3 மணிக்கு மட்டுவில் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில்நடைபெறவுள்ளது.

# விமானப்படை தளம்மீது தீவிரவாதிகள் தாக்குதல்

### காஸ்மீரில் 9 இந்தியப்படையினர் பலி

காஸ்மீரில்விமானப்படைத் தளம்ஒன்றின்மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் ஒன்பது இந்தியப் பாதுகாப்புப்படையினர் உயிரிழந்துள்ளார்கள், இதனை இந்திய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

தீவிரவாதிகள் அதிகளவிலான ஆயுதங்களைக் கைப்பற்றிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது தாக்குதலுக்குள்ளான முகாம் பாகிஸ்தான் எல்லையோரமாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது

### 30 ஆயிரம்

கிடைக்காதுசெய்ய வேண்டும் என கோரியதை அடுத்தே இப்பத்திரிகைகள் எரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகைகள் தீயிடப்படும் வரை ரணிலுடன் கூடச் சென்றவர்கள் அங்கேயே தங்கிநின்று பார்வையிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### கடத்தப்பட்ட

க லில் வைக்கப்பட்டிருப்பதாவும் குறிப்பிட்டசிலரைத்தவி வேறுயாரையும் சந்திப்ப தற்கோ அன்றி தொலைபே அழைப்புகளில் தொடர்பு கொள்வதற்கோதடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவிக்கின்றது.

### யுத்தமே

ஆகும்,

1988/89 கிளர்ச்சியை அடக்குவதற்கு சகல தரப்பினரதுஉதவிபெற்றுக்கொள்ளப்பட்டது. இதற்காக சர்வகட்சி மகா நாட்டில் எமக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்பட்டது இதனை எதிர்க்கட்சிகளுக்கு மிக தெளிவாக தெரியபடுத்த விரும்புகின்றோம் என்று தெரிவித்துள்ளார்.

## விசேட கூட்டம்

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவின் விசேடகூட்டம் ஒன்று இன்று காலை 10மணிக்குகோண்டாவில்மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படிகூட்டத்தில் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படி விளையாட்டு அபிவிருத்திக் குழுத் தலைவர் கேட்டுள்ளார்.

### தொண்டமானின்

மற்ற இருவரான கந்தசாமியும் ஏ. எம். டி- ராஜனும் விடுதலை செய்யப்பட்டனர்

கொள்ளுப்பிட்டி பொலிஸில் தமது காரியாலயம் உடைப்பு தொடர்பாகசெல்லச்சாமி செய்திருந்த புகாரைத் தொடர்ந்து. இ. தொ. கா. நிர்வாகச் செயலாளரும், உபதலைவருமான ஏ- எம். டி- ராஜனும் மத்திய மாகாணசபை உறுப்பினர் என்- கந்தசாமி, தொண்டமானின் பேரன் ஆறுமுகம் தொண்டமான் ஆகியோர் பொலிசாரால் தேடப்பட்டனர்-

இதைத்தொடர்ந்தே மேற்கூறப்பட்டவர்கள்பொலிஸில் ஆஜராகி வாக்கு மூலம் அளித்தனர்-


## 62-ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்:
1. 4. 1976

தமிழீழ மண்ணில்:
13. 11. 1993

லெப்டினனட் ரமணன் (சிவா)
(சிவஞானம் சிவபாலன்)

## யாழ் மாநகராட்சி மன்றம்
ஊழியர் நலன்புரிச் சங்கம்

# பொங்கல்
# இன்னிசை விழா

காலம்:- தைத்திங்கள் 1 ஆம் நாள் (14-1-1994)
வெள்ளி பி. ப. 3-00 மணி

இடம்:- நாவலர் கலாசார மண்டபம்

தலைவர்;- திரு. வே. பொ. பாலசிங்கம்
யாழ். மாநகர ஆணையாளர்

பிரதம விருந்தினர்:- திரு. மு. இராமலிங்கம்
B. Sc. Dip - in Edu.
அதிபர், யா / கனகரத்தினம்
மத்திய மகா வித்தியாலயம்

### நிகழ்ச்சி நிரல்

3-00 1. மங்கள விளக்கேற்றல்
2. இறைவணக்கம்
3. தலைமையுரை
4. பிரதம விருந்தினர் உரை

3-15 5. பொங்கல் இன்னிசை

இன்னிசை வேந்தர்:- பொன் சுந்தரலிங்கம் - பாட்டு
இசைஞான திலகம்:- V. R. இராதாகிருஷ்ணன் -வயலின்
இலயஞான திலகம்:- S. மகேந்திரன் - மிருதங்கம்
இசைக்கலா வித்தகர்:- S. துரைராசா - கெஞ்சிரா
இசைக்கலா வித்தகர்:- A. செல்வரெட்ணம் - கடம்
6. நன்றியுரை:- திரு. நா. சோதிலிங்கம், செயலாளர்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ். மாநகராட்சி மன்ற
10-1-1994 ஊழியர் நலன்புரிச் சங்கம்

(சி-8376)

தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு
உங்களுக்கோர் நற்செய்தி!

## COMPUTER துறையில் உறுதியான நிலையை அடைய விரும்புபவர்கட்கு!

வடதமிழீழத்தில் நீண்ட காலமாக (ஏழு வருடங்களுக்கு மேலாக) நவீன தொழில்நுட்பமுடைய கணணிகளை பாவித்து கணணித் துறைக்கென தனித்து இயங்கும் ஒரே நிறுவனம்

# Unikco Computer Centre

## எமது நிறுவனத்தில்

★ கணணியின் செயற்பாடுகள் (Printing உட்பட)
★ கணணியின் வகைகள் (Computer Types)
★ உங்கள் கல்வி, தொழில் துறைக்குரிய பயிற்சி நெறிகள்

போன்றவற்றிற்கான இலவச ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதன்மூலம் உங்கள் காலம் வீணாவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

★ மேலதிக விபரங்கட்கு!

வெலிங்டன் சந்திக்கருகில்



# UNIKCO
## COMPUTER CENTRE
37, CLOCK TOWER ROAD,
JAFFNA.

குறிப்பு:
அலுவலக நேரம்: அனைத்து நாட்களிலும்
காலை 9-00 — 12-00 வரை
மாலை 12-00 — 5-00 வரை

(சி-8374)

(சிவஞானம் சிவபாலன்)
(நாவலடி பன்னாலை, தெல்லிப்பளை)

''இலட்சிய வீரர் இறப்பதில்லை-
விலங்குடன் வேங்கைகள் நடப்பதில்லை''

பூநகரி-நாகதேவன்துறை ''ஒப்பறேசன் தவளை'' நடவடிக்கையின்போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட அனைத்து வேங்கைகளுக்கும் எமது அஞ்சலிகள்.

இன்று (13-1-94) தொல்புரத்திலுள்ள எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு சக போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் நினைவுகளுடன்
பத்தானைக் கேணியடி, குடும்பத்தினர்
தொல்புரம், உறவினர், நண்பர்கள்.
சுழிபுரம்.

(7215)

## மரண அறிவித்தல்

திருமதி
### வள்ளிப்பிள்ளை சங்கரப்பிள்ளை
(கருகம்பனை)

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் புத்தூரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிப்பிள்ளை சங்கரப்பிள்ளை நேற்று (12.01,1994) சிவபதமடைந்தார். இவர் காலஞ்சென்ற இளைப்பாறிய கருகம்பனை விதானையார் சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும், Dr. பத்மநாதன் (கொழும்பு), காலஞ்சென்ற சிவகுருநாதன், திருமதி வடிவாம்பிகை குணரத்தினம் திருமதி நகுலேஸ்வரி பாலசுப்பிரமணியம் (மலேசியா), திருமதி இலங்காதேவி, கணேசன்( ஆசிரியை ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி புத்தூர்), திருமதி அம்பிகாதேவி தவராஜசிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற குணரத்தினம் (மனேஜர்), Dr. பாலசுப்பிரமணியம் (மலேசியா), கணேசன் (பிரதி அதிபர் வயாவிளான் மத்திய கல்லூரி உரும்பராய்), தவராஜசிங்கம் ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று(13.1.94) வியாழக்கிழமை 11மணி அளவில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் புத்தூர் கிந்திசிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

புத்தூர் மேற்கு, தகவல்: மு. கணேசன்
புத்தூர். (7217) (மருமகன்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது